REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2020 டிசம்பர் 1 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 88 இல. 285 | December 01,Tuesday, 2020 | 16பக்கங்கள் | 30/-


இப்போது கடைகளில்

# ஜனாதிபதி மீது அவப்பெயரை உண்டாக்குவதே மஹர சிறை சம்பவத்தின் உண்மை பின்னணி

## வேறு எந்தக் காரணமும் இல்லை என்கிறார் விமல் வீரவன்ச

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிசாந்தன்**

இட நெருக்கடி காரணமாக மஹர சிறைச்சாலை கலவரம் இடம்பெறவில்லை. ஜனாதிபதி மீது அவப்பெயர் ஏற்படுத்தும் நோக்கிலான சூழ்ச்சியே இதன் பின்னணியில் இருப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மனித இரத்தத்தை பார்க்கத் தூண்டும் போதை மாத்திரையொன்றை சிறைச்சாலைக்குள் விநியோகித்து சிறைச்சாலைக்குள் கலவர நிலைமையை உருவாக்கும் நோக்கத்துடனே மஹர சிறைச்சாலை சம்பவமும் நடந்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

மஹர சிறைச்சாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக இடம்பெற்ற சர்ச்சையின் போது கருத்துத் தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,



மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட நிலைமை தொடர்பாக நான் தனிப்பட்ட ரீதியில் தகவல்களை தேடிப்பார்த்தேன்.

இந்த சம்பவம் சிறைச்சாலையிலுள்ள இட நெருக்கடி நிலைமையால் ஏற்பட்டதல்லவென புலனாய்வு பிரிவுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. வெலிக்கடை சிறைச்சாலையில் 'சமயங்' என்ற குற்றவாளியின் சகாவான சத்துரங்க என்பவர் இருந்தார். அவர் வெலிக்கடை சிறைச்சாலையினுள் 'ரிவர்ஸ்' எனும் போதை மாத்திரையை கைதிகளுக்கு வழங்கி வந்தார்.

அந்த மாத்திரையை பயன்படுத்திய பின்னர் மனித இரத்தத்தை பார்க்க வேண்டும் என்ற வெறி வரும். வெலிக்கடை சிறைச்சாலைக்குள் அந்த மாத்திரைகளை விநியோகித்து கொலைகளை செய்வதற்கு தூண்ட எதிர்பார்த்துள்ளனர். போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட பிரபல குழுவொன்றே சத்துரங்க என்ற நபரை வழிநடத்தியுள்ளது.

இதனை அறிந்த புலனாய்வுப் பிரிவினர் சத்துரங்க என்பவரை வேறு சிறைச்சாலைக்கு மாற்றியுள்ளனர். இதனால் வெலிக்கடையில் அதனை செய்ய முடியாது போயுள்ளது. ஆனால் மஹர சிறைச்சாலையில் இதனை நிறைவேற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் இட நெருக்கடி நிலைமையால் இடம்பெற்றதாக நினைக்கக் கூடாது. திட்டமிட்டு சிறைச்சாலையில் கொலை செய்யும் நிலைமையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராக இருந்த

06



புதிய பொலிஸ் மாஅதிபர் சி.டீ.விக்கிரமரத்ன நேற்று (30) விஜேராம மாவத்தையிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார். 35ஆவது பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து சி.டீ. விக்கிரமரத்ன, உத்தியோகபூர்வமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து தனது சேவை குறித்து கலந்துரையாடினார்.



## கொரோனா வைரஸ் காரணமாக கை

# மஹர சிறை மு

# 8 பேர் பலி; 71 பே... காயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட குழப்ப நிலையின் போது அதனை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 08 பேர் பலியாகியுள்ளதுடன் 71 பேர் காயமடைந்துள்ளனர்.

மஹர சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ள குழப்பகரமான சம்பவத்தையடுத்தே சிறைக்கைதிகள் 08 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கைதிகள் சிலர் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்ற போது அங்கு பதற்ற நிலை ஏற்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது. அதனையடுத்து அங்கு தீப்பரவலும் இடம்பெற்றதாக சிறைச்சாலைகள் ஆணையாளர்

06

**காயமடைந்த கைதிகளில் 26 பேருக்கு கொரோனா தொற்று**

**அதிரடிப்படையினர் காவல்; நிலைமை கட்டுப்பாட்டில்**

றச்சாட்டை நிரூபிக்க போதியளவு ஆதாரம் இல்லை;

# திவிநெகும மோசடி வழக்கு ...சில் ராஜபக்ஷ விடுதலை



**மேலும் மூவரும் நிரபராதிகள் என நீதிமன்றம் தீர்ப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

திவிநெகும மோசடி வழக்கில் இருந்து முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட 4 பேரும் நிரபராதிகள் என தெரிவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது, திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான நிதியை முறைக்கேடாக பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக இவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் நல்லாட்சி அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட இந்த வழக்கில் அனைத்து குற்றச்சாட்டுகளும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை என கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பசில் ராஜபக்ஷ தரப்பு சமர்ப்பிப்புகளை முன்வைத்தது.

இந்த சாட்சியங்களை ஆராய்ந்த பின்னர் அரசு தரப்பும் சமர்ப்பிப்புகளை தாக்கல் செய்தது, அதாவது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அரசு

06



# மலையக மக்களுக்கு சவாலாக இருந்து வரும் சுகாதாரத்துறை

## சபையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான்

**சம்ஷ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

மலையகத்தில் சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொள்வது ஒரு சவாலான விடயமாகவுள்ளது. வைத்தியசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் போதாதுள்ளது. இது தொடர்பில் உடனடியாக சுகாதார அமைச்சர்

06



# க.பொ.த சாதாரண தரப்பரீட்சை இரு தினங்களில் இறுதித் தீர்மானம்

## கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையை ஏற்கனவே குறிப்பிட்ட தினத்தில் நடத்துவதா? இல்லையா? என்பது தொடர்பில் இரண்டு தினங்களுக்குள் தீர்மானத்தை வெளிப்படுத்துவதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். ஏற்கனவே

06

# கொரோனா பரவல் குறைவடையலாம்

## டாக்டர் சுதத் சமரவீர தெரிவிப்பு



கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் கொவிட்19 பரவல் எதிர்வரும் காலங்களில் குறைவடையலாம் என தொற்று நோயியல்

06

கொரோனா வைரஸ் தீவிரமாக பரவல்;

# கட்டுப்படுத்தாவிடின் பேராபத்து காத்திருக்கிறது

திஸ்ஸ விதாரண எச்சரிக்கை விடுப்பு



# கொழும்பில் நிலைமை ஆபத்தாக உள்ளது

# PCR; புறக்கணிப்போருக்கு மூன்று வருடங்கள் சிறை

புறக்கணிக்க உதவுவோருக்கும் அதே தண்டனை

# கண்டி நகர் மிகவும் ஆபத்தான நிலையில்